இலவச காலாண்டு சமய இதழ்



AKARATHEEPAM

# அகர தீபம்

www.akaram.eu

14.04.2018 - 13.06.2018




5ஆம் ஆண்டில் கால்பதிக்கும்...

# யோகர் சுவாமிகள்

மாலை : 05 மலர் : 01

திருவள்ளுவர் ஆண்டு 2049

திருச்சிற்றம்பலம்

சைவநெறிக்கூடம்

# அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, 3008 Bern, Switzerland
( 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch

அனைத்து நாட்களும் காலை 09.00 மணி முதல் இரவு 20.00 மணி வரை திருக்கோவில் திறந்திருக்கும்.

மாலை 18.00 மணிமுதல் 20.00 மணிவரை பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

## 2018ம் ஆண்டு நாட்காட்டி

### விடை (வைகாசி)

| | | |
|---|---|---|
| 09.05.18 | புதன்கிழமை | திருநாவுக்கரசர் குருபூசை, சிறப்பு வழிபாடு, மாலை 18.30 மணிமுதல் |
| 12.05.18 | சனிக்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு, மாலை 18.30 மணிமுதல். |
| 14.05.18 | திங்கட்கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல். |
| 26.05.18 | சனிக்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு, மாலை 18.30 மணிமுதல். |
| 28.05.18 | திங்கட்கிழமை | விடைமுறம் (வைகாசி விசாகம்) திருவழிபாடு 108 பாற்குடத்துடன், மாலை 16.30 மணிமுதல் |
| 29.05.18 | சனிக்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |
| 31.05.18 | வியாழக்கிழமை | திருஞானசம்பந்தர் குருபூசை, சிறப்பு வழிபாடு, மாலை 18.30 மணிமுதல் |

### ஆடவை (ஆனி)

| | | |
|---|---|---|
| 11.06.18 | திங்கட்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு, மாலை 18.30 மணிமுதல். |
| 13.06.18 | புதன்கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு,மாலை 16.30 மணிமுதல். |
| 18.06.18 | திங்கட்கிழமை | மாணிக்கவாசகர் குருபூசை, சிறப்பு வழிபாடு 18.30 மணிமுதல் |
| 20.06.18 | புதன்கிழமை | ஆடவை (ஆனி) உத்தரம், மாலை 17.00 மணிமுதல் |
| 25.06.18 | திங்கட்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 27.06.18 | புதன்கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, மாலை 16.30 மணிமுதல் |

**17.08.2018 கொடியேற்றம் 25.08.2018 தேர்த்திருவிழா நடைபெறும்**

# நுழைவாயில்..

**அகரதீபம்**
**வாசக அன்பர்களுக்கு**
**வணக்கம்...**

ஐந்தாவது ஆண்டின் முதலாவது இதழாக இந்த இதழை வழங்குவதில் எமது மகிழ்வைத் தெரியப் படுத்துகிறோம். தமிழர், தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, கலாச்சரம், இனத்தின் பல்லாண்டு கால வரலாறு என்பன ஏனைய இனத்துக்கோ, நாட்டு மக்களுக்கோ இல்லாத பெருமைகள் இன்று உலக அளவில் அறிவில் அடிப்படையில் எமது இனத்துக்கே உரியன என ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

எனவேதான் உலகமே ஒன்று சேர்ந்து எமது இன அழிப்பில் பங்கேற்றதும் அல்லாமல் எம் இன அழிப்பை மேலும் தொடரவும், முழுமையாக அழிக்கப்படும் வேலைகளைத் தடையின்றித் தொடரவும் உதவி வருகின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனச் சங்ககாலப் புலவனே எமது இனத்தின் வாழ்வின் அறத்தை உலகறியச் செய்து விட்டான். எனவேதான் தமிழ் இனம் இன்னமும் மிகப் பெரும் சோதனைக்கு உள்ளாகிய காலகட்டத்தில் அழிவை நோக்கி விரைகிறது. 2002 முதல் 2009 வரை படிப்படியாக எமது இனம் பல அழிவுகளையும் இழப்புகளையும் சந்தித்து, இன்று ஒரு முழுமையான இன அழிப்பையும் மனிதப் படுகொலைகளின் களமாக எமது நிலம் மாற்றப்பட்டது.

சர்வதேசங்களின் ஆதரவுடன் இலங்கை - இந்திய அரசுகள் நடத்தும் நல்லாட்சி அரசாங்கத்திலும் எமக்கான எந்தவித நன்மையோ நீதியோ கிடைக்காத நிலையில், சர்வதேசச் சட்டங்களின் துணையோடு எம் இனத்துக்கான உரிமைகளைப் பெற வேண்டும் என வடமாகாண முதலமைச்சரும் முன்னாள் உச்சநீதி மன்ற நிதியரசருமான திரு. விக்கினேஸ்வரன் கூறிவருகிறார். இந்நிலையில் கடந்த சில மாதங்களாக தமிழ் தேசியம் தலை தூக்கிவிட்டுவிடக் கூடாது என்பதில் எமது துரோகக் கூட்டமைப்பு தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

தமிழரின் ஆன்மீகம் சைவ சித்தாந்த மரபினால் ஆனது. தமிழ் தேசியம் இல்லாமல் தமிழரின் ஆன்மீகமும், பண்பாடும், கலாச்சாரமும், தமிழ் மொழியும் தமிழ் மக்களும் இலங்கையில் நிலைத்து நிற்க முடியாது. இவற்றுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இந்திய தேசியமும், சிங்களதேசியமும் எம்மண்ணின் மீதும் மக்கள் மீதும் திணிக்கப்பட்டு வருகிறது.

அதற்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக சிங்கள இராணுவத்தால் பறிக்கப்பட்ட தமிழர் நிலங்களை மீள அளிக்கும் பொழுது அவற்றில் புதிதாகக் கட்டப்பட்ட புத்தவிகாரைகளும் அவற்றைக் கட்டாயமாக பாதுகாக்க வேண்டும் என்ற எழுதப்படாத சட்டமும், கட்டாயமும் காணிச் சொந்தக் காரர்களின் மீது திணிக்கப் படுகிறது.



**மரணம் அடையும் வரை போற்றி வளர்த்த சைவத் தமிழ் மக்களுக்கு இன்றைய இழிவான கேவல வாழ்க்கை மிகப் பெரும் வரலாற்றுப் பாடமாக நாம் பார்க்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.**

சுமந்திரன் போன்றோரின் பொய்கள் புரட்டுகள் நிறைந்த அரசியல் செயற்பாடுகள் மிகப் பெரும் அச்சுறுத்தலாகப் பார்க்க வேண்டிய எச்சரிக்கையை சைவத் தமிழ் மக்கள் இனிமேலும் புறந்தள்ளிவிட முடியாது.

அப்படியான ஒரு புத்தவிகாரை காங்சேன் துறையில் உள்ள முருகன் கோயில் ஒன்றிழன் வளாகத்தில் குமார கோயிலாக சிங்கள இராணுவத்தால் கட்டி வழங்கப் பட்டுள்ளது. மீளளிக்கப் பட்ட நிலங்களில் சிங்கள இராணுவமே தொடர்ந்து விகாரையின் கட்டுமானங்களைச் செய்து வருகிறதாம்..

இதே விகாரைக்குள் தமிழர்களின் கோயில் சிலைகளும் பொருட்களும் காணப்படுவதாகச் செய்தி கூறுகிறது. இதைத்தான் சுமந்திரன் தமிழருக்குக் கிடைத்த பெரிய அரசியல் வெற்றி எனப் பாராட்டுகிறார். கத்தோலிக்கரான சுமந்திரனுக்கு சைவப் பாரம்பரியத்தில் யாழ்ப்பாண தமிழ் அரசர்களின் கீழ் வாழ்ந்த தமிழர்களின் மதப் பற்றும், மண் பற்றும் தெரிந்து கொள்ள முடியாது.

**தந்தை செல்வாவின் மதத்தையும், வளர்ப்பையும் கவனிக்காமல் தமிழ் சைவப் பெருமக்கள் தமது இனத்தின் தலைவராக**

இந்து மாமன்றம் மற்றும் சைவ சமய அமைப்புகள் விழித்து எழுந்து தமது எதிர்ப்புக் குரலை உரக்கப் பேச வேண்டிய காலம் இது. தமிழ் தேசியத்தை கட்டி எழுப்ப வேண்டிய காலக் கட்டாயத்தை சைவத் தமிழ் பெருமக்கள் தமது தலையாயக் கடமையாக ஏற்றுச் செயற்பட வேண்டும் என அகரதீபம் உரிமையோடு பகிரங்க கோரிக்கை வைத்துவிடை பெறுகிறது.

அகரதீபமும் இதற்கான பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். எழுத்தாளர்களும் சமூகநல விரும்பிகளும் இவை தொடர்பான எழுத்து ஆக்கங்களை அகரதீபத்துக்கு அனுப்ப வேண்டும் எனவும் அன்போடு கேட்டு விடை பெறுகிறோம்.

**ஆசிரியர், அகரதீபம்.**



# சரணாகதி

'மகாபாரதத்தில் சாஸ்திர ஞானம் கற்றுத்தேர்ந்த அத்தனை பெரியவர்களும் அநியாயத்திற்கு எதிராகக் குரல் கொடுக்காமல் மௌனமாக இருந்த கணப்பொழுது பாஞ்சாலி சபை நடுவே துகிலுரியப்பட்ட போது நிகழ்ந்தது. கிருஷ்ண பரமாத்மா பாஞ்சாலியின் சேலையை வளரச்செய்து அவள் மானத்தைக் காப்பாற்றினார்' என்ற பகுதியை ஒரு ஆசிரியர் தன் மாணவர்களுக்குக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

பாடம் முடியும் முன் மாணவர்களுக்கான கேள்வி நேரம். மாணவன் ஒருவன் எழுந்து கேட்டான் "குருவே! கிருஷ்ணபரமாத்மா, பாஞ்சாலியை அவ்வளவு தூரம் கஷ்டப்படுத்தாமல் முதலிலேயே அந்தச் சேலையை வளர வைத்திருக்கலாம் தானே?" என்றான்.

ஆசிரியரும் மாணவனைப் பார்த்து, "மிக நல்ல கேள்வி" என்று அவனது கேள்வியைப் பாராட்டியதோடு அனைத்து மாணவர்களையும் கவனிக்கும்படி கூறிவிட்டு விடை சொல்லத் தயாரானார். "மாணவர்களே! பூனை தன் குட்டியைத் தூக்கும் போது பார்த்திருப்பீர்கள், தன்னை முழுமையாகத் தன் தாயிடம் அர்ப்பணம் செய்துவிட்டு இருப்பதை அவ்வாறே குரங்குக் குட்டியும் தன் தாயை இறுகப் பிடித்துக்கொள்ளும். எவ்வளவு தான் தூரம் பாய்ந்தாலும் குட்டி தன் பிடியை விடாது இதுதான் சரணாகதி, தம்மை முழுமையாக அர்ப்பணித்தல்.

திரௌபதையும் ஆரம்பத்தில் இறைவனை நம்பவில்லை. அங்குள்ளோரிடம் கெஞ்சினாள். தான் முயற்சிசெய்து பார்த்தாள். எதுவுமே நடக்கவில்லை, கடைசியாகத்தான் கடவுளை நம்பினாள். நடப்பது நடக்கட்டும் என்று தன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்புக் கொடுத்தாள். அப்போது சேலை வளரத் தொடங்கியது" என்று விளக்கம் கொடுத்தார்.


உலகெங்கும் தமிழர்கள் பரந்து வாழ்ந்தாலும் இன்றைய கணனி யுகத்திற்கு ஈடுகொடுத்து வாழும் நிலையில் சைவர்கள் இருக்கின்றனர். "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற வேதவாக்குக்கு அமைய அவனி எங்கும் இந்து ஆலயங்கள் பிற மதத்தவரையும் தன்பால் ஈர்க்கும் தன்மை வேதநாயகன் சிவனுக்கே உரியது.. அதனால் தான் திருவாசகத்தில் "ஆராத இன்பம் அருளும் மலை போற்றி" என்றார்.



# ஐரோப்பாவில் கோபுர தரிசனம்







அன்று தமிழகத்திலும் ஈழத்திலும் வலுகட்டாயமாக மதமாற்றம் இடம் பெற்றாலும் அவர்களால் சைவ சமயத்தையே இந்து சமயத்தையே அவர்களால் முற்றாக அழித்துவிட முடியவில்லை. காலத்திற்கு காலம் அருளாளர்கள் மூலம் இறைவன் தன் அருள் கடாச்சத்தை அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றான். உருவ வழிபாடுகள் மாறலாம் ஆனால் எங்கும் நிறைந்து அருளுகின்றான் இறைவன்.

ஐரோப்பாவில் உள்நாட்டு யுத்தம் காரணமாக 1983ம் ஆண்டு கலவரத்தின் பின் அதிகமாக ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள். அவர்கள் கைகளில் இருந்தது. அவர்கள் வழிபடும் தெய்வத்திருவுருவங்களின் படங்களாகும். ஒருபுறம் போராட்டத்தில் அங்கே ஆலயங்கள் அழிய ஐரோப்பாவில் மெல்ல மெல்ல கருக்கொண்டு உருக்கொண்டு உலகமக்கள் போற்றும் அளவுக்கு



வியாபித்து நிற்கின்ற ஆலயங்களில் பெருமை சொல்ல வார்த்தை ஏது? அதனால்தான் திருமூலர் திருமந்திரத்தில் "சிவ சிவ என்றிட ஆனந்தம்" என்று கூறுகின்றார்.

முதலில் படிப்புக்காக வந்த தமிழர்கள் சாதிக்க முடியாததை அகதி முகவரி தாங்கிய தமிழன் சாதித்துக் காட்டி நிற்கின்றான். அன்று எனது பிள்ளைக்கு தமிழ் வராது என்று பெருமை பேசிய தமிழன் ஆலயமே தஞ்சம் என்று அலைகின்றான். ஏன் இந்த நிலை? என்றால் அவசர உலகத்தில் ஆன்ம ஈடேற்றம் மனஅமைதி தருவது ஆலயம் ஒன்றுதான்.

தன் நலம் கருதாத அருள் பணியாளர்களின் அளப்பெரிய தொண்டு மற்றும் தன் நலம் கருதாத நன்கொடையாளர்களின் மிகப்பெரிய தொண்டும் ஏனைய மதத்தினரே பிரமிப்பில் ஆழ்த்தி இருக்கின்றன.


அந்தவகையில் முதன் முதலில் ஜேர்மனியில் ஹம் நகரில் அருளாட்சி செய்துவரும் காமாட்சி அம்பாளுக்கே உயரிய இராஜகோபுரம் அமைக்கப் பெற்றது. ஏனைய மதத்தவர்களுக்கே





மறுக்கப்பட்ட உரிமை ஜேர்மனியில் காமாட்சிக்கே வழங்கப்பட்டது. ஒரு சாலை அமைப்பது கடினம். அதன் வழி பயணிப்பது சுலபம்.

அந்தவகையில் ஹம் காமாட்சி அம்பாள் ஆலய ஆதீன கர்த்தா ஆலய குரு கலாநிதி. சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரகுருக்கள் தமிழ் வரலாற்றில் இந்து மதத்திற்கு புகழ் தேடித்தந்த பெருமகனார். இவர் காட்டிய வழியிலே இஸ்லாம் மதத்தவர்களும் திறந்த வெளியில் மசூதி அமைக்க அனுமதி ஜேர்மன் அரசால் வழங்கப்பட்டது.



இந்த 2018ம் ஆண்டிலும் மூன்று அரை மீற்றர் உயரமான கிருஸ்ணர் சிலை அமைத்து இந்து சமயத்தவர்களுக்கு மிகப்பெரிய வரலாற்று பணி செய்து இருக்கின்றார். மேலும், ஜேர்மன் தலைநகராம் பேர்லின் மயூரபதி முருகன் ஆலயம் ஐரோப்பாவில் இரண்டாவது பெரிய இராஜகோபுரத்துடன் உயர்ந்து இராஜ கம்பீரமாக காட்சி தருகின்றன. பேர்லின் தலைநகரில் 6000 இந்துகள் வாழ்கின்றனர். அடுத்தபடியாக கனேவர் முத்துமா அம்மாரி அம்மனும் அழகிய இராஜகோபுரம் அமைக்க பெற்றது.

படிப்படியாக அண்மையில் ஜேர்மனியில் இராஜகோபுர அடிக்கல் நாட்டுவிழா இரு ஆலயங்களில் இடம் பெற்றது. குமஸ்பாக் முருகன் ஆலயம், டோர்ட்முண்ட் -ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திர மௌலீவரர் ஆலயம் (சிவன் கோவில்) நெதர்லாந்து நாட்டில் அதாவது பாடப் புத்தகத்தில் படித்திருப்பீர்கள் ஒல்லாந்தர் என்று. அதோநாட்டில் தான் அழகிய இராஜகோபுரத்துடன் டென்கில்டன் நகரில் ஸ்ரீவரதராஜ செல்வவிநாயகர் ஆலயம் நீலவானில் உயர்ந்து அழகிய இராஜகோபுரத்துடன் தரினம் தருகின்றது. மேலும் பல நாடுகளின் இந்து சமய வளாச்சியை தருகிறேன்.





## வட்டுக்கோட்டை

# அருள்மிகு வீரபத்திர சிவன் கோவில்

**“குளித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்**
**குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல் மேனியில்**
**பால்வெண் ணீறும்**
**இனித்த முடைய எடுத்த பொற்பாமுங்**
**காணப் பெற்றால்**
**மனிதப் பிறவியும் வேண்டுவதே**
**இந்த மானிலத்தே”** - **(திருச்சிற்றம்பலம்)**

இந்துமாக் கடலில் மறைந்த குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாக விளங்குவது எங்கள் ஈழ மணித் திருநாடு. இதன் நான்கு புறங்களிலும் நான்கு சிவாலயங்கள் அமைந்திருந்தன! அவற்றுள் கிழக்கே திருக்கோணேஸ்வரமும், மேற்கே மன்னாரை அடுத்து திருக்கேதீஸ்வரமும், மட்டுமே இன்று இருக்கின்றன. இவை தேவாரப் பாடல்கள் பெற்றவை! திருமூலதேவர் இந்த நாட்டினைச் ‘சிவபமி’ எனச் செப்பினர் என்று சொல்வார்கள்.

ஈழத்திருநாட்டின் சிகரமென கற்றோர் புகழும் யாழ்ப்பாணம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. இதன் மேல் பகுதியில் வளமெல்லாம் நிறைந்த வட்டுக் கோடைடையூர் அமைந்துள்ளது. அங்கு கம்பீரமாக வீற்றிருப்பவர் வீரபத்திரர்.

“ஆத்தியணி வேணியர்தம் அருளாணை
வழிவந்த அமல போற்றி
தீத்தொழில் செய் சிறுவிதிதன் வேள்வியொடு
தீமையுள் சிதைத்தாய் போற்றி
ஏத்திநிற்கும் அடியவர்தம் இடர்குலமும்
வினைமாசும் இல்லை யாக்கில்
காத்தருளும் விரபத்திர வட்டூராய்
கடிமலர்த்தாள் போற்றி போற்றி”

வட்டுக்கோட்டையூரில் பண்டு தொட்டே செந்தமிழ்த் தொல்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் ஒரு பாலர் குளம் தொட்டு வளம் பெருக்கி மேழிச்




செல்வத்தை பாதுகாத்து வருகின்றனர். மற்றும் ஒரு பாலர் வங்க மூர்ந்து திரைகடலோடித் திரவியம் சேர்க்கின்றனர். வேறு சிலர் செழுங்கலை பயின்று ஏனையோர்க்கு இன்சுவை நல்கின்றனர். மேலும் சிலர் சித்த மருத்துவத்தில் தேர்ந்து சேவை ஆற்றுகின்றனர். சுருங்கக் கூறின் வட்டுக்கோட்டையை 'வானவர் நாடு' எனக் கூறலாம்.


ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்னர் மேலைப்புல மாந்தரரன போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். வியாபாரத்திற்காக வந்த இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தங்களது மொழி, கலாச்சாரம் (பண்பாடு) ஆகியவனவற்றை பரப்பும் பணிகளில் ஈடுபட்டனர். இவர்கள் வட்டுக் கோட்டையூருக்கு 1811ம் ஆண்டிலேயே கால் பதித்தனர்.

இவர்களின் கலாச்சாரப் பரப்பல் காரணமாக நம்மவர்களில் பெரும்பான்மையானவர்கள் சைவ நெறியை விட்டு கிறிஸ்த்துவ நெறியில் செல்ல ஆரம்பித்தனர். அவர்களை மீண்டும் சைவ நெறிக்கு அழைத்துவர நமது பெரியோர்கள் பலர் அயராது உழைத்தனர்! இன்றும்கூட வட்டுக் கோட்டையில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் கல்லூரியும், பெரிய கிறித்தவத் தேவாலயமும் அவர்களையே நினைவூட்டுகின்றன.

வட்டுக்கோட்டையில் நெடுங்காலமாக ஒரு வீரபத்திரர் கோவில் இருந்ததாம். அது ஓலைக் குடிசையில் இருந்து பின்னர் வைரக் கற்றளால் புதுப்பிக்கப் பட்டுள்ளதாக பேசப் படுகின்றது. அங்குள்ள பழையகாலச் சிலைகள் பஞ்ச லோகங்களால் உருவாக்கப்பட்டது. இக் கோவிலில் பத்திரனும், பத்திரையும் உற்சவ வேளைகளில் திருஉலா வருவது வழக்கம்.

வட்டுக்கோட்டையில் சிறப்பு மிக்க குடிகளில் வீரமாகாளர் குடியும் ஒன்று. வீரபத்திரர் சுவாமியை குலதெய்வமாகக் கொண்டுள்ள இவர், சித்த வைத்தியத் துறையில் உள்ள மூன்று துறைகளிலும் வல்லவர், நல்லவர் எனப் பெயர் பெற்றவர். வீரமாகாளியாருக்கு கணபதியார் என்னும் புதல்வர் இருந்தார். கணபதியாருக்கு அப்பா, சின்னப்பா, கார்த்திகேயர் என மூன்று புதல்வர்கள் இருந்தனர். இவர்களை 'முதலி' என்றும் அழைப்பதுண்டு. இதில் அப்பாமுதலி சைவ சித்தாந்த நூல்களையும் திருமறைகளையும் இனிது கற்றவர். சித்த வைத்தியத்தில் இவரை ஊரும் நாடும் போற்றி





வந்தது. விசுவேசர் புராணம் இவரை,

"வேண்டு சித்த மருத்துவநூல் அளக்கருண்டு
மேவினர்தம் அருநோய்கள் தீர்த்த மேலோன்
ஆண்டொரு நூற்றிவ் வவனி வைகி
அரியதவ ஒழுக்கங்காத் துயர்ந்த தோன்றல்
நீண்டசிவ தளிநி றுவி நிபத்தம் எல்லாம்
நிமலவிக வேசருக்கி யற்று நேயன்
காண்டகுசீர் சிவவப்பா முதலி என்னும்
காவலரை உளதிருத்திக் கருதல் செய்வாம்"

சிவசித்தர் அப்பர்முதலி ஓலைக் குடிசையில் இருந்த வீரபத்திர சுவாமியை விரிவாக்கி உறுதியான கற்சுவரினால் கட்ட எண்ணியபோது அவ்விடத்தில் சிவலிங்கப் பெருமானை வைப்பதே சாலச் சிறந்ததாக இருக்கும் என எண்ணி நிலத்தை வெட்டிய போது அவ்விடத்தில் பெரிய பெரிய கற்பாளங்கள் இருந்தன! அவை முன்பே அவ்விடத்தில் பிறிதோர் ஆலயம் இருந்து மறைந்த செய்தியை உறுதியாக்கியது.

வட்டுக்கோட்டையில் ஒரு சிவாலயத்தை அமைப்பதற்காக வட்டுக்கோட்டைக்கு அருகே உள்ள தொல்புரத்தில் வசித்து வந்த கோணமலை என்னும் பெரியாரின் உதவியால் காசியம்பதியில் இருந்து சிவலிங்கம் ஒன்றை வருவித்தனர். அது சிவாகம விதிப்படி பிரதிட்டை செய்யப்பட்டது. இவருடன் அங்கு விசாலாட்சி சமேதவிசுவேசர் ஆகியோரும் அருள்பாலித்து வருகின்றார்கள்

ஆலயத்தின் வடிவமைப்பு இப்படியாக அமைந்துள்ளது. முதலில் கொடிக் கம்பத்தைக் காண்கின்றோம். இதனை தூலலிங்கம் என்பார்கள். அடுத்து பலிபீடத்தோடு திருநந்திதேவர் உள்ளார். கொடிக்கம்பத்தின் அடியில் தம்ப வினாயகரும், சூரியன், அக்கினி, சந்திரன் ஆகியோரும் காட்சி தருகின்றனர். அடுத்து சிதம்பரேசர் சிவகாமி அம்மையுடன் வீற்றிருக்கின்றார். கருவறை மாடத்தின் தென்பால் நடன கணபதியும், தட்சணா மூர்த்தியும் காணப்படுகின்றனர். மேற்கில் லின்கோப்பவர் உள்ளார். வடபால் பிரம்ம தேவரும் சிவ துர்க்கையும் இருக்கின்றனர்.

இனி பரவசமூர்த்திகளைப்



பார்ப்போம். தேவியர் புடை நிற்க பாம்பணையில் பள்ளி கொள்கின்றார் திருமால். அடுத்து சந்தான கோபாலனும், தொடர்ந்து கணபதி கோட்டமும் மற்றும் வீரபத்திரர் பத்திரையுடன் நின்ற வண்ணம் மிகப்பெரிய சிலா விக்கிரமாகக் காட்சி தருகின்றார். பின்புறத்தில் பஞ்சலிங்கம் காணப்படுகின்றது. இதையடுத்து முருகப்பெருமான் தேவசேனா வள்ளிநாயகி உடன் வீற்றிருக்கின்றார். இவரை அடுத்து சனிஸ்வரர் தெற்கு நோக்கியுள்ளார். கருவறையின் கோமுகைக்கு எதிரே உள்ள கோவிலில் சண்டியம் பெருமான் காட்சி தருகின்றார்.

மேலுஞ் சென்றால் நவக்கிரகங்களின் கோவில் உண்டு. அவர்களைத் தாண்டினால் உற்சவ மூர்த்திகளைக் காணலாம். இறுதியாக பைரவர் கோட்டம் உண்டு. இதற்கு வடபுலத்தில் யாகசாலை அமைந்திருக்கின்றது. ஆலயத்தின் வெளிப்புறத்து ஈசான மூலையில் சிவஅப்பா முதலியாரின் நினைவாலயமும் (இலிங்கம்) தீர்த்தக் கிணறும் அருகில் தண்டபாணி திருவுருவமும் அமைந்துள்ளது.

இங்கு நித்திய பூசை காலை, மாலை இருவேளைகளிலும் நடைபெற்று வருகின்றது. நைமித்திய பூசை விசேட பூசையாகும். திங்கள், வெள்ளி, மற்றும் பிரதோசம், மாதப்பிறப்பு, கார்த்திகை சதுர்த்தி, பூரணை, நடேசர் அபிசேகம், கந்தசட்டி என்பனவும் நடைபெறுகின்றது.


நித்திய கிருத்தியம், நாளாந்த பூசையிலும் மகாபஞ்ச கிருத்தியம் மற்றும் கொடியேற்ற விழாக்களிலும் நடைபெறுகின்றது. கிருத்தியம் என்பது தொழில் அதாவது படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும்.

அந்தணக் குருமாரே வீரபத்திரருக்கு பூசை செய்வார்கள். நிர்வாகத்தை சிவ அப்பா முதலியும், அவர்பின் கந்தையா முதலியும், அதையடுத்து இராச வைத்தியர் அ.க.குமாரசாமி அவர்களும், அவரது தம்பி வைத்திய சிகாமணி அ.க.காசிப்பிள்ளையும் பரிபாலித்து வந்தார்கள். தற்பொழுது வைத்தியக் கலாநிதி கா.சுமந்திரன் அவர்கள் பரிபாலித்து வருகின்றார்.

இவ்வீரபத்திரர் கோவிலின் கோபுர வேலைகள் நிதிப்பற்றாமை காரணமாக பாதியிலேயே நின்றுவிட்டது. தற்பொழுது அதனைத் தொடர்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

"வள்ளலே அமலா போற்றி
வந்திடும் அல்லல் எல்லாம்
பொள்ளென விடியப் போந்த
பொற்கதிர் பரிதி போற்றி
விள்ளுசீர் விசானை அன்னை
மேவுசெம் பொருளே போற்றி
வள்ளியார் வதியும் வட்டூர்
விசுவேச அடிகாள் போற்றி"

பாகம்- 13



# அறிவோம் ஆன்மீகம்

சென்ற இதழில் ஆன்மீகம் என்ற சொல்லும் அதன் அர்த்தங்களும் எப்படித் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டும் தவறாகப் போதிக்கப் பட்டும் வந்துள்ளது என்பதைக் கவனித்தோம். முன்பெல்லாம் சைவ சித்தாந்தப் படிப்பும், தமிழும் சிறப்பாகக் கற்பிக்கப் பட்டும், புலமைத் தேர்வுகள் நடத்தப்பட்டும், தமிழும், சைவசித்தாந்தமும் மிகச் சிறந்த முறையில் வளர்க்கப்பட்டும் வந்தன.

யாழ்ப்பாணத் தமிழ் அரசன் சங்கிலிய மன்னனை சதிகாரர்களின் துரோகம் காரணமாக வெற்றி பெற்று தமிழ் மக்களை ஆளவந்த ஒல்லாந்தர் எனப்பட்ட டச்சுக்காரர் முதலாக ஆங்கிலேயர் 1947ல் விட்டுப் போகும் வரை ஆட்சி நடத்திய அந்நிய தேசத்தவர் யாரும் தமிழ் மொழியையும், சைவத்தையும் வாழ, வளரவிட வில்லை. முலீறாக அடிமைப்படுத்திய ஒல்லாந்தர் போத்துக்கீசர் ஆகியோர் டச்சு மொழியையும், புரட்டஸ்தாந்து எனப்பட்ட கத்தோலிக்க மதத்தின் ஒரு பிரிவையும் ஆங்கில மொழிக் கல்வியையும் தமிழ் மக்கள் மீது திணித்தனர்.

அவர்களால் தமிழரின் மதமாக விளங்கிய சைவமும், தமிழ் மொழியும் மிகப் பெரும் எதிர்ப்பையும், அடக்குமுறையையும், அழிவையும் சந்தித்தன. இதேநிலை ஆங்கிலேயரின் ஆட்சிக் காலமான 19, 20ம் நூற்றாண்டுகளிலும் நீடித்தது. 1850களில்

தொடங்கி நல்லூர் ஆறுமுக நாவலரின் சமயோசித அறிவினால் அவரே தமிழையும், சைவத்தையும், தமிழரின் அரசியல் பின்னடைவுகளையும் கண்டுதெளிந்து ஒரு யுகப் புரட்சி நாயகனாக மரி தமிழ் மக்கள் மத்தியில் ஒருவிழிப்புணர்வை உருவாக்கினார்.

சிறந்த ஆங்கில மொழிப் புலமையைப் பெற்றிருந்த காரணத்தால் ஆங்கிலேயரான பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ் கற்பிக்கும் பணியை மேற்கொண்டார். நாவலரது தமிழ் ஆங்கிலப் புலமையும் கிருஸ்தவ பிரச்சார பிரசுரங்களை தமிழில் மொழி மாற்றம் செய்த நேர்த்தியையும் பிறசமயம் எனப் பாராது அவற்றை நடுநிலையோடு மொழி பெயர்த்ததைப் பாராட்டினார்.

அதனால் கிருஸ்தவ மத நூலான பைபிளை நாவலரைக் கொண்டே தமிழில் மொழி பெயர்ப்பித்து அச்சிட்டார். நாவலரின் உதவியால் வெளியான தமிழில் வெளியான கிருஸ்தவ மதப் பிரசுரங்கள் தமிழரின் மதமான சைவத்தையும் தமிழர் பண்பாட்டையும் கடுமையாகத் தாக்கும் பிரச்சாரங்களாகப் பயன்படுவது கண்டு நாவலர் தமது பதவியைத் துறந்ததோடு தமிழையும், சைவத்தையும் வளர்க்கும் தொண்டனாக மரிச்செயற்பட்டார்.

இன்றும் நல்ல தமிழில் உண்மையான மொழிபெயர்ப்பாக நாவலரின் தமிழ் பையிள் உலகத்தாரால் பாராட்டப்படுகிறது. எந்த மதமாயினும்? என்ன செயலாகினும்? நேர்மையாகவும், நடுநிலையுடனும், குறித்த காலத்தில் செய்து காட்டுவதுதான் உண்மையான ஆன்மீகம் என வாழ்ந்து காட்டியவர்தான் ஆறுமுக நாவலர். அப்படியான போதிலும் அவர் தம்மை ஒரு ஈழத் தமிழனாக, சைவனாக செய்ய வேண்டிய




# அகர தீபம்

மாலை : 05 மலர் : 01

தலைமை
**த. இரவீந்திரன்**

ஆசிரியர்
**ஆதவன்**

உதவி ஆசிரியர்
**வண்ணை தெய்வம்**

ஆசிரியர் குழு
**வியாசன்**

வடிவமைப்பு
**ஈழமயூரன்**

ஒப்பு நோக்குனர்
**திரு.செ. அமுதவாணன்**

தொடர்புகளுக்கு



European Tamils Union e.V.
PO.Box 4153, 59037 Hamm
Germany

Tel : 00 49 23 81 95 66 09
Fax : 00 49 23 81 95 66 10

Email : akaratheepam@akaram.eu



**www.akaram.eu**

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY,
HOLLAND, SWEDEN, ITALY, CANADA





© ETU e.V.2014 All rights reserved

தார்மீகக் கடமையை மறக்காமல் தமிழுக்கும், சைவத்துக்கும் பெரும் உழைப்பையும், தொண்டையும் ஆற்றினார். இல்லற வாழ்க்கையில் ஈடுபடாது துறவறம் பேணி தமது வாழ்க்கையை மக்களுக்கும், தமிழுக்கும், சைவத்துக்கும் பயன்படுத்தினார்.

கடுமையான பஞ்சத்தின் பொழுது, பொது இடங்களில் கஞ்சித் தொட்டிகளை நிறுவி ஏழை மக்களின் பசியைப் போக்கினார். இத்தோடு அவர் தம் பணிகளை நிறுத்தி விடவில்லை. ஐசவ சமய வினாவிடை எனும் நூல்கள் வரிசையில் சைவ சமய நெறிகளை கேள்விகள் பதில்கள் வடிவில் இலகு தமிழில் சிறு பாலர் முதல் உயர் வகுப்பு மாணவர் வரை படித்தறிந்து கொள்ளும் வகையில் அச்சிட்டு வெளியிட்டார். மாலைவேளைகளில் வண்ணார் பண்ணை சிவன் கோயிலில் சைவமதப் பிரசங்களை நிகழ்த்தி சைவ சமயத்துக்கு எதிரான கிருஸ்தவ மதபிரச்சாரங்களை தகுந்த ஆதாரங்களோடு முறியடித்தார்.



மேலும் தமிழ் மொழியை பாலபோதினி எனும் தொடர் புத்தகங்களாக பாலர் வகுப்பு முதல் உயர்தர மாணவரும் தமிழை பிழையின்றிப் படித்து, அறிவை வளர்க்கவும், தமிழை தவறின்றி எழுதவும், படிக்கவும் இலக்கண நூல்களை பலதரத்து மாணவரும் கற்க தாமே எழுதி அச்சடித்து வெளிளிட்டார். அதுவரை தமிழ் மொழியில் கவிதைகள் வெண் பாக்கள் என நிறைந்திருந்தத் தமிழை வசனநடைத் தமிழாக மாற்றி வழி சமைத்தவர் ஆறுமுக நாவலரேதான்.

அவரது ஆன்மீகப் பணி அவற்றோடு நின்றுவிட வில்லை. அன்றைய ஆங்கிலஅரச அதிபராக அளவற்ற அதிகாரங்களோடு வடமாகாணத்தை யாழ்ப்பாணத்தில் இருந்து பிரித்தானிய அரசின் பிரதிநிதி போல் விளங்கிய அதிபர் துவைனம்துரை அவர்களின் தமிழர் விரோத செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்து அவருக்கு எதிராக இலங்கையின் தேசாதிபதியிடமே முறையிட்டு தமிழ் மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் பணியையும் ஏற்றுச் செயற்பட்டார்.

ஈழத் தமிழ் மக்களின் தேசிய தன்மான உணர்வுகளைத் தட்டி







எழுப்புவதில் அவரது பொதுப் பணிகள் முன் மாதிரியாக அமைந்தன எனலாம். அவரது சைவ சமயப் பற்றும் அதன் நிமித்தம் அவர் காட்டிய சாதி சமய சம்பிரதாயங்கள் மீதான அதீதகரிசனையும் கண்டிப்புகளும் கிருஸ்தவ மதப் பிரச்சாரங்களை முன்னெடுத்த ஆங்கிலேய அமைப்புகளுக்குப் பெரும் பலமான எதிரப்பை உருவாக்க இலகுவாக அமைந்தன.

ஒருபுறத்தில் அவரது தமிழர் உரிமைக் குரல் யாழ் வாலிபர் சங்கம் என்ற அமைப்பின் அரசியல் களமாக உருவெடுத்த நிலையில் இந்த அமைப்பு பின்னர் வலுவற்று சிங்களத் தேசிய அரசியலால் மடை மாற்றப்படவும் நாவலரின் தீவிர சைவ மத சாதி சம்பிரதாய தீட்டு என்பன சாதகமாக அமைந்து விட்டன என்பதை மறுக்க முடியாது.

நாவலரின் சைவ மதப் பற்றை ஆன்மீகம் எனப் பார்க்க முடியாது என்பதும், மறுக்க முடியாத உண்மை. எப்படியாயினும் ஈழத் தமிழரின் அரசியலில் நாவலரின் ஆன்மீகமும் பெருமளவு பங்களிப்பு செய்துள்ளதை மறுக்கவும் முடியாது. இச்சிறு கட்டுரையில் ஆறுமுக நாவலரை முழுமையாக விமர்சிக்கவோ மதிப்பிடவோ முடியாது. இது அத்தகைய ஒரு முயற்சியும் அல்ல. ஆனால் தமிழரின் தேசியம் அரசியல் உரிமைகள் அபிலாசைகள் எனக் தமிழர் வரலாறைக் குறிப்பிடும் பொழுது நாவலரை ஒதுக்கி விட்டுப் பேசமுடியாது என்பது மட்டும் உண்மை.

தமிழரின் தேசிய அரசியல் புத்தெழுச்சி பெறும் இந்நாட்களில் நாவலரை தமிழ் மக்கள் பின்பற்ற வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. ஈழத் தமிழரின் அரசியல் ஆன்மீகம் இல்லாத அரசியலாக இருந்ததும் இல்லை. இனிமேலும் இருக்க முடியாது. அதற்காக நாம் நாவலரை மறு வாசிப்புக்கு உள்ளாக்க வேண்டியும் உள்ளது.

(தொடரும்)


வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயம்

'தஞ்சை பெரிய கோயில கட்டினது யாரு?'ன்னு கேட்டா....

எல்லோரும் யோசிக்காமல் "ராஜா ராஜா சோழனு..." பதில் சொல்லிடுவாங்க.

ஆனா, ராஜா ராஜா சோழனோ, 'அந்த கோயில கட்டினது நான் இல்லை...'ன்னு சொல்றாரே!

தஞ்சை பெரிய கோயில் கட்டி முடிக்க பட்டு குட முழுக்கு கும்பாபிஷேகத்துக்கு நாளும் குறிக்கப்பட்டு விட்ட நேரம் அது...

கோயில் எதிர்பார்த்தபடி நல்லபடியாய் கட்டி முடிக்க பட்ட சந்தோசத்துல ராஜா ராஜா சோழன் நிம்மதியா தூங்கும் போது... கனவுல இறைவன் ஆன பரமசிவன் அவன் முன்னே எழுந்தருளினார்.

'ராஜா ராஜா!' என்றழைக்க...

ராஜா ராஜா சோழன், "இறைவா என் பாக்கியம் என்னவென்று சொல்வது... தாங்கள் எனக்கு காட்சி தந்தது நான் செய்த பாக்கியம்... தங்களுக்கு நான் கட்டிய கோயில் எப்படி இருக்கிறது?... இந்த ஊரிலே எல்லோரும் வியந்து பார்க்கும் மிக பெரிய கோயிலாக கட்டியுள்ளேன்... அதற்கு 'தஞ்சை பெரிய கோயில்' என்று பெயர் சூட்ட போகிறேன்... மகிழ்ச்சி தானே தங்களுக்கு?" என்று கேட்டான் ஆனந்தமாக.

இறைவன் சிரித்து கொண்டே, "ம்ம்ம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம்... ஒரு மூதாட்டியின் காலடி நிழலின் கீழ் யாம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம்..." என்று கூறி மறைந்தார்.

ராஜா ராஜனின் கனவும் கலைந்தது.

விழித்தெழுந்த ராஜா ராஜன் தான் கண்ட கனவை பற்றி மறுநாள் அரசவையில் கூறி அந்த கனவுக்கு விளக்கம் கேட்டான்.

யாருக்கும் பதில் தெரியவில்லை.

பின் நேராக கட்டி முடிக்க பட்ட தஞ்சை பெரிய கோயிலுக்கு சென்றான்.

கோயில் சிற்பியிடம் தான் கண்ட கனவை

# தஞ்சை பெரிய கோயிலை கட்டியது யார்?



கூறி விளக்கம் கேட்டான்.

சிற்பி தயங்கியவாறே, ”அரசே கடந்த மூன்று மாதங்களாக மோர் விற்கும் வயதான ஒரு ஏழை மூதாட்டி தினமும் மத்திய வேளையில் இங்கு வருவார்... ஏழ்மை நிலையில் இருந்தாலும் தன் பங்குக்கு இந்த கோயிலுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று எண்ணி தான் விற்கும் மோரில் பாதியை காசுக்காகவும், பாதியை இந்த கோயிலுக்காக வேலை செய்யும் எங்களுக்கு குடிக்க இலவசமாக கொடுப்பார்... நாங்கள் காசு கொடுத்தாலும் வாங்க மறுத்து விடுவார்.

ஏதோ இந்த ஏழை கிழவியால் இந்த கோயிலுக்கு செய்ய முடிந்த தொண்டு என்று கூறி காசு வாங்க மறுத்திடுவார்.

இப்படி இருக்கும் போது போன வாரத்தில் ஒரு நாள், ஆலய சிற்பங்களின் எல்லா வேலையும் முடித்த எங்களுக்கு இறைவனின் கருவறையின் மேலிருக்கும் கல்லை மட்டும் சரி செய்யவே முடியவில்லை... நாங்களும் அதன் அளவை எவ்வளவோ முயற்சி செய்து அளவெடுத்து வைத்தாலும் ஒன்று கல் அளவு அதிகமாக இருந்தது அல்லது குறைவாக இருந்தது.

எங்கே ஆலய பணி நடக்காமல் போய்விடுமோ என்று நாங்கள் கவலையுடன் இருந்தோம்...

அப்பொழுது இந்த மோர் விற்கும் மூதாட்டி வந்து மோர் கொடுத்து கொண்டே, 'ஏன் கவலையாய் இருக்குறீர்கள்?' என்று கேட்டார்கள். நாங்களும் கல் சரி ஆகாத விசயத்தை சொன்னோம்.

அதற்கு அவர்கள் என் வீட்டு வாசற்படியில் பெரிய கல் ஒன்று உள்ளது... நான் அதை தான் என் வீட்டுக்கு வாசற்படி போல் வைத்துள்ளேன். அதை வேண்டுமானால் எடுத்து பொருத்தி பாருங்கள் என்றார். நாங்களும் நம்பிக்கை இல்லாமல் அந்த மூதாட்டி சொன்ன கல்லை எடுத்து வந்து பொருத்தினோம்...

என்ன ஆச்சிரியம்! கருவறையின் மேற் கூரைக்கு அளவெடுத்து வைத்தது போல் மிக சரியாக இருந்தது.

அதைதான் இறைவன் தாங்களுக்கு உணர்த்தி இருப்பார் என்று அடியேன் நினைக்கிறன்... என்றான் சிற்பி.

இதை கேட்டதும் ராஜா ராஜனுக்கு எல்லாம் புரிந்தது...

எவ்வளவு பொருள் செலவு செய்து கோயில் கட்டினாலும் இறைவன் நேசிப்பது அன்பான ஒரு ஏழையின் பக்தியை தான்.

ஆரவாரமாக பொருள் செலவு செய்து நான் கோயிலை கட்டினாலும், அமைதியாக ஏழ்மை நிலையிலும் அந்த மூதாட்டி விற்க இருந்த மோரை கோயில் திருப்பணி செய்வோருக்கு அர்ப்பணித்தாரே...”

என்று கண்ணீர் மல்கி...

பின் சுதாரித்து தன் அமைச்சரை அழைத்து, ”அமைச்சரே கும்பாபிஷேகம் நடக்கும் நன்னாளில் அந்த மூதாட்டியை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்... நான் வெண்குடை ஏந்தி அந்த அம்மையாரை வைத்து கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள்...

இந்த கோயில் கட்டியது அந்த அம்மையார் தான்... நான் அல்ல...

இதற்கு இறைவனே சாட்சி என்றான்...





# சித்ரா பௌர்ணமி

இவ்வுலகின் பாவ புண்ணி பலனை அறிய சிவபெருமான் பார்வதி தேவியின் மூலம் தங்கப்பலகை கொண்டு வரச் செய்து அதில் சித்திரம் அமைத்தார். இதனை கண்டு அதிசயித்த பார்வதி இந்த சித்திரத்தை பேச வைக்க சிவனிடம் வேண்டினார். சிவனும் மந்திர உபதேசம் செய்து அந்த சித்திரத்திற்கு பேசும் சக்தியை கொடுத்து சித்ரபுத்திரன் என்ற பெயரும் வைத்தார்.

இந்த சித்திர புத்திரன் (சித்ரகுப்தன்) சித்திரா பௌர்ணமி தினத்தில் அவதரித்தார். அண்ட சராசரங்களிலுள்ள முன்னாள் கணக்குகளையும், பிரம்மா விஷ்ணு முதலானவர்களுடைய பாவ புண்ணிய கணக்குகளையும் தினமும் தமக்குத் தெரிவிக்கும் படி உத்தரவு பிறப்பித்திருந்தார். அதன்படி சித்திர புத்திரனார் கயிலையிலிருந்து கொண்டு கணக்குகளை எழுதிவந்தார்.

ஒரு சமயம் தேவேந்திரன் தனக்கு மக்கட்பேறு வேண்டுமென்று தருமங்கள்

பல புரிந்து இறைவனை நோக்கி இந்திராணியுடன் தவம் புரிந்தார். சிவபெருமான் காமதேனுவை அழைத்து, இந்திரன் இந்திராணி தவத்தை எடுத்துரைத்துப் பின்னர், சித்திர புத்திரரை இந்திரனுக்குப் புத்திரனாகப் பிறந்து, அவன் கவலையை தீர்க்குமாறு அருள் புரிந்தருளினார். அங்ஙனமே சித்திர புத்திரனார் காமதேனுவின் வயிற்றில் உதித்து பாவ புண்ணியங்களைப் பகுத்து வந்தார். இந்த சித்திரபுத்திர நாயனார் கதை சித்திரா பௌர்ணமி அன்று ஆலயங்களில் படிக்கப்பட்டு அன்னதானங்கள் நடைபெற்று வருகின்றன. சித்திரைக் கதை, சித்திரைக் கஞ்சி எனவும் வழங்கப்படும்.

## சித்திரா பௌர்ணமி

இந்த நோன்பை எல்லோரும் சிறப்பாக கொண்டாடுவர்கள் சித்திரை நட்சத்திரம், பௌர்ணமி தினத்தில் அல்லது ஒரு நாள் முன் - பின்னாக வருவதால் அந்த மாதத்திற்கு சித்திரை மாதம் என்று பெயர். சித்திர குப்தனை வேண்டிக்கொண்டு பெரும்பாலும் பெண்களே விரதம் மேற்கொள்கின்றனர்.



சித்ரா பௌர்ணமி தினத்தில் சித்திர குப்தனைப் போல மாக் கோலம் போட்டு, ஏடு, எழுத்தாணி வைத்து விளக்கேற்றி பூஜை செய்து பொங்கலிட்டு வழிபடுவர். பாவங்களிலிருந்து விடுபடவும், நரகத்திற்கு போகாமலிருக்கவும் இந்த விரதம் மேற்கொள்கின்றனர். இந்த நாளில் மரணதேவனின் விசேட பிரதிநிதியான சித்ரகுப்தனுக்கு விசேட வழிபாடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் சித்திரா பௌர்ணமி தினத்தில் செய்யப்படும் இந்த பூஜையால் மேல் உலகில் உள்ள தேவர்கள் திருப்தியடைந்து மனிதர்களின் செயல்களை மிகுந்த பரிவுடன் தீர்மானிக்கிறார்கள்.




# யோகர் சுவாமிகள்

## ஒரு பார்வை



எமது காலத்திலே வாழ்ந்து மறைந்த சித்த புருஷர்களில் யோகர் சுவாமிகள் மிக மிக முக்கியமானவர், கடையிற் சுவாமிகளின் சீடர்களில் ஒருவர் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளின் ஒரே ஒரு சீடர் யோகர் சுவாமிகளாகும். செல்லப்பா சுவாமிகள் உலகத்திற்கு தன்னைக் காட்டிகொள்ளாது வாழ்ந்து மறைந்து போன மகான். உலகத்தோர் கண்ணுக்குப் பைத்தியக் காரன் போன்றே காட்சியளித்தார்.

அதனால் உலகம் அவரை விசர்ச் செல்லப்பா என்றே பெயர்சூட்டி அழைத்தது செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளுக்கு நான்கு மகா வாக்கியங்கள் உபதேசித்தார். இந்த நான்கு மகா வாக்கியங்களும் சகல சாஸ்திரங்களினதும் சாரம் கொண்டவை. ஆதலினால் இவை மகா வாக்கியங்கள் என்று அழைக்கப் பட்டன.

"ஒரு பொல்லாப்புமில்லை"

"எப்பவோ முடிந்த காரியம்"

"நாம் அறியோம்"

"முழுதும் உண்மை"

யோகர் சுவாமிகள் சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்ட புரத்திலே அம்பலவாணர் என்னும் சைவப் பெரியார் ஒருவர் வாழ்ந்தார். இவரது தர்மபத்தினி சின்னாச்சி அம்மையார் இவர்களது பூர்வ

புண்ணிய விசேடத்தினாலே 29-05-1872 இல் அவிட்ட நட்சத்திரத்தில் ஓர் ஆண்மகவு பிறந்தது.


பெற்றோர் இக்குழந்தைக்கு யோகநாதன் என்று நாமகரணம் சூட்டினர். அம்பலவாணரின் சகோதரர் சின்னையா என்பவர் கொழும்புத் துறையைச் சேர்ந்த கத்தோலிக்கப் பெண் ஒருவரை திருமணம் செய்து தமது பெயரை யோசேப்பு என்றும் மாற்றிக் கொண்டார்.

அம்பலவாணர் மஸ்கெலியா என்ற மலைப் பிரதேசத்தில் கடை ஒன்று நடத்தி வந்தார். யோகநாதனுடைய கல்வி விடயத்தை யோசேப்பு கவனித்து வந்தார். அதனால் யோகநாதன் மாவிட்டபுரத்தைவிட்டு கொழும்புத் துறையில் வாழ வேண்டிய சூழ்நிலை உருவானது.

அக்காலத்தில் சைவப் பாடசாலைகள் மிக மிகக் குறைவு. அதனால் யோகநாதனின் கல்வி கத்தோலிக்கப் பாடசாலையிலேயே ஆரம்பமானது. இளமையில் துடுக்குடையவராயும், புத்தி யுக்தி உள்ளவராயும் வாழ்ந்து வந்தார். யோகநாதனுக்கு வயது எட்டாயிருக்கும் போது தாயார் இறந்து விட்டார்.

சிறிய தந்தையார் யோக நாதனுடைய கல்வியில் மிகுந்த ஊக்கம் காட்டினார். ஆங்கிலக் கல்வி கற்கும் பொருட்டு சம்பத்திரிசியார் கல்லூரியில் இணைக்கப் பட்டார். பகலில் சிறிய தகப்பனார் வீட்டிலும், மாலையில் யாழ்ப் பாணம் கச்சேரிக்கு அருகாமையிலுள்ள தந்தை வழி மாமியாராகிய முத்துப்பிள்ளை அவர்களுடைய இல்லத்துக்கும் போய் விடுவார்கள்.

எட்டாம் வகுப்பு வரை ஆங்கிலம் கற்றார். அம்பலவாணர் யோகனை அழைப்பித்து தேயிலைத் தோட்டம் ஒன்றிலே வேலைக்கு அமர்த்தினார். மலையகத்தின் இயற்கைச் சூழ்நிலை யோகனின் மனதைக் கவர்ந்தது. ஒருநாள் யோகநாதன் சிவனொளிபாதம் சென்று சூரியன் உதிக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்ந்து வந்தார். சிவனொளி பாதம் சென்று வந்த யோகநாதன் இயற்கையின் சூழலிலே தமது மனதைப் பறிகொடுத்து விட்டார்.



அதனால் தன்பாட்டிலேயே பேசத் தொடங்கினார். இது எல்லாம் உண்மை. எனது உடம்பு சிவன் சொத்து. சிவனுக்கே அது சொந்தம். அவனையே தேடிப் போனேன். இந்த விபரீத எண்ணங்களைக் கண்ட தந்தையார் இவரை யாழ்ப் பாணத்திற்கே அனுப்பிவைத்தார்.

யோகர் சும்மா இருக்க மாட்டார். உத்தியோகம் தேடித்திரிவார். இரணை மடுக்குளம் கட்டுமான வேலை நடைபெற்ற காலம் அங்கு சென்ற போது பிறவுண் என்ற பெரியியலாளர் பண்டகசாலை பாதுகாவலர் என்ற உத்தியோகத்தை இவருக்கு அளித்தார். உங்கள் கடமையை மறவாதீர்கள் என்று எல்லோருக்கும் உபதேசித்த சுவாமிகள் நேர்மையாகவும் உண்மையாகவும் வேலை பார்த்தார். பெரியியலாளரிடம் ஒரு நன்மதிப்பை பெற்றுக்கொண்டார்.


யோகநாதன் கிளிநொச்சியை விட்டு மாவிட்டபுரம் திரும்பினார். அவருக்கு அப்போது வயது 32. தந்தையும் இறந்துவிட்டார். தாயை எட்டு வயதில் இழந்தார். தந்தையை வாலிப வயதில் இழந்தார்.

ஆனால் மாவிட்ட கந்தன் கருணையை இழக்கவில்லை. கீரிமலையிலும் மாவிட்ட புரத்திலும் மரி மரி வசித்தார். கீரிமலையிலிருந்து நடையிலேயே நல்லூருக்கு வருவார். ஆத்மீகத் தாகம் மேலிட்ட காலம். குரு ஒருவரை தேடி அலைந்த காலம். பற்றுக் கோடாக இருந்த இரு முதுகுரவரையும் இழந்த போது பற்றுக்கோடு ஒன்றை நாடினார். நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளை சந்தித்தார். செல்லப்பா சுவாமிகளின் பார்வை இவரை காந்தமெனக் கவர்ந்தது. குருநாதனை சந்தித்த அனுபவத்தை அவரே கூறுகின்றார்.

கருத்தில் நினைந்துருகி கைகூப்புந் தொண்டர் வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல்- திருத்தலத்தில் தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன் ஆரடா நீ என்றான் அவன் விசர்ச் செல்லப்பா என்று மக்களால் ஏசப்பட்ட செல்லப்பா சுவாமிகளைச் சூழ ஒரு கூட்டம் கூடத் தொடங்கியிருந்த காலம் செல்லப்பா சுவாமிகளின் அரிய சீடர்கள் கதிரவேலுச்சாமியும், யோகநாதனும் ஆவர். பெரும்பாலும் மூவரும் ஒன்று கூடித்திரிவர். சண்டை போடுவர். சமையல் செய்வர். சமையல் முடியும் தருணத்தில் சட்டி பானையை உடைப்பர். இச்செயலைக் கண்டால் யார்தான் இவர்களைப் பைத்தியம் என்று கூறமாட்டார்கள்.

யோகர் சுவாமிகள் கொழும்புத் துறையில் சிற்றம்பலம் சம்பந்தர் என்னும் ஒரு சைவப் பெரியார் வளவில் றோட்டுப் பக்கமாக ஒரு இலுப்பை மரம். இந்த இலுப்பை மரத்தின் கீழேதான் யோகர் சுவாமிகளுடைய அருந்தவம் நடைபெற்றது. கொழும்புத்துறை வளவில் இருந்த கடையொன்றைத் திருநாவுக்கரவு என்பவர் திருத்தி அமைத்துக் குடிசை ஒன்று கட்டிக்கொடுத்து சுவாமிகளை அதில் தங்குமாறு அவரும் அவரது தாயாரும் அன்புடன் வேண்டிக் கொண்டனர்.

அவர்களுடைய அன்புக்கு



கட்டுப்பட்ட சுவாமிகள் பூத உடலை விட்ட உயிர் பிரியும் வரை அக்குடியையிலேயே வாழ்ந்து வந்தார்கள். சுவாமிகளை நாடி நாள் தோறும் கூட்டம் கூடத் தொடங்கியது. செவ்வாய் வெள்ளிக்கிழமைகளில் பெருங்கூட்டம் திருமுறைகள் பாராயணம் இடம்பெறும். எல்லாத் தரங்களிலும் உள்ள மக்கள் ஒன்று கூடுவார்கள். ஆன்மீக தாகம் கொண்டவர்களும் வருவார்கள். தங்கள் இட்டல் இடைஞ்சல்களை தீர்த்துக் கொள்வதற்காகவும் வருவார்கள். சுவாமிகளை சோதித்துப் பார்க்கவும் வருவார்கள்.

சுவாமிகள் தம்மை நாடி வந்தவர்களுடைய உள்ளப்பாங்கை அறிந்து அவர்களுக்கேற்ற வகையில் புத்திமதிகள் கூறுவார்கள். சிலரை ஏசியும் துரத்துவார்கள். அதைப் பொருட் படுத்தாமல் தம்மைத் மேலும் மேலும் நாடி வந்தவர்களை அன்புடன் அணைத்து அருளுரை வழங்குவார்கள். அவர்களை ஏசுவதன் மூலம் அவர்கள் வினைகளைச் சுவாமிகள் தொலைத்து விடுவார்கள். இவ்வுண்மையை உணர்ந்த அடியார்கள் சுவாமிகளின் மறமயக் கருணையை நினைந்து நினைந்து ஆனந்த புஷ்பம் சொரிவார்கள்.

"எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஒரு இனம்" என்பது சுவாமிகள் தம்மை நாடி வருபவர் களுக்கு அடிக்கடி கூறும் உபதேசமாகும். 'எனக்கும் உனக்கும் என்ன வித்தியாசம். எல்லோரும் சமம்' என்றும் கூறுவார்கள். "நீயும் மனிதன் நானும் மனிதன் உங்கள் கடமையைப் போய்ச் செய்யுங்கள். இங்கே ஏன் வருகின்றீர்கள்? நாங்கள் பிச்சைக்காரர்கள், நாங்கள் சும்மா இருக்கின்றோம். எங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்று ஏசிக்கலைப்பதும் உண்டு.

"கர்மவினையால் எமக்கு இப்பிறவி வந்தது. நாம் ஒன்றும் அறியோம். நாம் ஏன் இங்கு பிறந்தோம்? இப்பிறவியால் ஒரு பொல்லாப்பும் இல்லை. அதனால் பாதகமும் இல்லை. பிறப்பு வர இருந்தது. வந்துவிட்டது. நாங்கள் ஆத்மலாபத்தை நல்லாய்த் தேடிக் கொள்ளலாம்." என்று உபதேசம் செய்தார்கள்.

சுவாமிகளுடைய உபதேசங்களை எலலோருக்கும் பரப்ப வேண்டும் என்று அடியார் கூட்டம் விரும்பியது. சுவாமிகளிடம் மாத வெளியீடு ஒன்று வெளியிடுவது பற்றி அடியார்கள்

விண்ணப்பித்தார்கள். சுவாமிகளும் அதற்கிசைந்து நாம் எல்லோரும் சிவத் தொண்டர்கள். நாம் செய்வது சிவத்தொண்டு ஆகவே எமது வெளியீடும் 'சிவத் தொண்டன்' ஆக இருக்கட்டும் என்றார்கள்.

1935ம் ஆண்டு மார்கழி மாதம் முதலாவது இதழாகிய சிவத்தொண்டன் திரு.க.கி.நடராசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. சிவத்தொண்டனுக்கு நிலையம் ஒன்று காங்கேசன்துறை வீதியில் *4-11-1953* இல் உருவானது. அந்த நிலைய மேல் மாடியில் இன்னும் தியான மண்டபத்தில் சுவாமிகளுடைய ஆன்மிக அலையை இன்னும் அனுபவிக்கலாம்.

சுவாமிகள் தமது அடியார்கள் எங்கெங்கு இருந்தார்களோ அங்கங்கெல்லாம் செல்வார். யாருக்கும் அறிவித்தல் கொடுக்க மாட்டார். இருந்தாற் போல் ஒரு அடியவருடைய வீட்டில் தோன்றுவார். கேள்வியுற்ற அடியவர்கள் எல்லோரும் அங்குவந்து கூடுவர். அவர்களுக்கெல்லாம் நல்லுபதேசம் கிடைக்கும். சிலசமயம் கண்மூடி சிவயோகத்திலே ஆழ்ந்து விடுவார். அன்பர்களும் தியானத்தில் மூழ்கி ஆனந்தம் பெறுவர். இரண்டு வருடகாலம் சுவாமிகள் கொழும்புத்துறை ஆச்சிரமத்தை விட்டு எங்கும் செல்ல வில்லை. *24-03-1964* செவ்வாய்க் கிழமை அதிகாலை ஆயிலிய நட்சத்திரத்தில் சுவாமிகள் மகாசமாதி அடைந்தார்கள். சுவாமிகளுடைய குருபூசை ஆயிலிய நட்சத்திரத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

எவ்வுயிரும் பெருமான் முன்னிலையென்று கருணை செய் கடவுள் உள்ளும் புறமும் உள்ளார். சுவாமிகளின் மறைவுக்குப் பின்னர் அவரது சீடர்களான மார்க்கண்டு சுவாமிகள், சந்த சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் போன்றோர் அவரது பணியை முன்னெடுத்துச் சென்றார்கள்.


## ஆலயங்களுக்கான அறிவித்தல்!



'அகரதீபம்' இதழை பெற்றுக் கொள்வதற்கும்,
ஆலயங்களுக்கான விளம்பரங்களைப்
பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

**00 49 23 81 98 77 897**
**00 49 176 47 11 87 11**

# மௌன விரதமும் அதனால் கிடைக்கும் பயன்களும்



விரதங்களில் உயர்ந்ததாக கூறப்படுவது, மௌன விரதம். உடலின் அனைத்து வகை இயக்கங்களை கட்டுப்படுத்துவதே, மௌனவிரதம். பேச்சு, எண்ணம், செயல் இவற்றை நிறுத்தி, மனதை இறை சிந்தனையில் செலுத்தி இருப்பதே, மௌன விரதமாகும்.

மௌன விரதம், ஞானிகளாலும், பல்வேறு சமய பெரியோர்களாலும், மோன நிலையில் இறை நிலையை அடைய, அனுஷ்டிக்கப்பட்டது. மௌன விரதம் என்பது, தவ ஞானிகளுக்கு சிறந்த ஆன்மீக அரணாக விளங்கியது, பகவான் இரமணரும், காஞ்சி பெரியவரும் அவ்வப்போது மௌன விரதம் இருந்து இறையுடன் கலந்திருப்பர். திருச்செந்தூர் திருமுருகனின் கந்த ஷஷ்டி விழாவின் கடைசி நாளில், முருகனடியார்கள், ஒரு வார காலம் அனுஷ்டித்த விரதத்தை, மௌன விரதம் இருந்தே நிறைவு செய்வர். இதன் மூலம், தங்கள் கோரிக்கைகளை சீரிய முறையில் முருகப்பெருமான் நடத்தித் தருவார் என்பது, முருகனடியார்களின் நம்பிக்கை.

## மௌன விரதம் என்றால் என்ன?

முதலில் நமக்கு மௌனவிரதம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தாலே, நாம் மனித வாழ்வின் விளக்கத்தை அடையும் நீண்ட பயணத்தில், நம்மை இணைத்துக் கொள்கிறோம் என்றுதானே பொருள்.

மௌனவிரதம் என்பது நம்மை நாம் அமைதியாக மனதை ஒடுக்கி, இறை சிந்தனை அல்லது சிந்தனையை ஒருநிலைப்படுத்துவதாகும். இதனால் என்ன நடக்கும்? அமைதியாக ஓரிடத்தில் தரையில் தர்ப்பை பாய் அல்லது கோரைப்பாய் விரித்து அமர்ந்து, அலைபாயும் மனதை ஒருமுகப்படுத்தி, சிந்திக்கும்போது, தினசரி வாழ்வில் நம்மை பாதிக்கும் அனைத்து செயல்களும் நம்முன் வந்துபோகும். இன்னும் சற்று ஆழமாக சிந்திக்க, அவையெல்லாம், நம்மாலேயே உண்டான பாதிப்புகள் என்பதையும் அறிந்து, அவற்றை எப்படி கடக்கவேண்டும் என்று சிந்திக்க, விடைகள் கிடைக்கும்.

மாதம் ஒரு முறை பழச்சாறு மற்றும் தண்ணீர் மட்டும் உட்கொண்டு, மௌன விரதம் கடைபிடிக்க, மனம் பொலிவாகி, எண்ணங்களும் செயலும், பேச்சும் வளமாகும். நம் பேச்சில் உள்ள உண்மைத்தெளிவு, அடுத்தவரிடம் ஒரு ஈர்ப்பை உண்டாக்கும். இதுவரை, நாம் வாழ பிறரைக்கெடுத்தேனும் வாழலாம் என்ற சுயநல கண்ணோட்டம் மறைந்து, நம்மைப்போலவே அவரும், என்ற சக உயிரை மதிக்கும் மனநிலை உண்டாகும்.



# கடவுள் நினைப்பது

ஒருநாள் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பூலோகம் வந்து மானிடர்களைப் பார்த்து விட்டுச்செல்லலாம் என எண்ணி நகர்வீதி உலாவந்தார். சாதாரண மனிதர் உருவில் வந்த ஸ்ரீகிருஷ்ணரைப் பக்தர் ஒருவர் உணர்ந்து கொண்டார். “பகவானே! பூலோகத்திற்கு வந்த உங்களைச் சந்தித்ததில் எனக்கு பெரும் மகிழ்ச்சி” என்றார். அதற்குப் பகவான், “பரவாயில்லை, சாதாரண மனித உருவில் வந்தாலும் என்னைக் கண்டுகொண்டாய்; சரி, நான் பூலோகத்திற் சில மனிதர்களைச் சந்திக்க வேண்டி உள்ளது. என்னுடன் வா!” என அழைத்துச் சென்றார். பக்தரும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பின் சென்றார்.

சிறிது தூரம் சென்றதும் ”பக்தா! எனக்கு தண்ணீர்த் தாகமாக உள்ளது. இந்தச் செல்வந்தர் வீட்டிற் தண்ணீர் வாங்கி வா” எனக் கூறப் பக்தரும் அந்தச் செல்வந்தர் வீட்டுக் கதவைத்தட்ட, வெளியே வந்த செல்வந்தரிடம் பக்தன் ”பகவான் ஸ்ரீகிருஷ்ணர் வந்திருக்கிறார் உங்கள் வீட்டில் ஒரு குவளையிற் தண்ணீர் வாங்கி வரச்சொன்னார்” எனச் சொல்ல அந்தச் செல்வந்தரோ, ”யாராக இருந்தாலும் தண்ணீர்

தரமுடியாது. அப்படிக் கொடுத்தால், எங்கள் வீட்டிற் செல்வம் தங்காது; தண்ணீர் இல்லை என்று சொல்லிவிடு" எனத் திருப்பி அனுப்பினார்.

பக்தன் ஏமாற்றத்தோடு திரும்பி வந்து பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் தண்ணீர் தர முடியாது என அலட்சியமாகச் சொல்லிவிட்டனர் எனச் சொல்லப் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் சிரித்தாவாறு "இந்த செல்வந்தனுக்கு மேலும் பொன்னும் பொருளும் வந்து சேரட்டும்" எனச் சொல்லிவிட்டு, ஸ்ரீகிருஷ்ணர் மேலும் நடக்க ஆரம்பித்தார். பக்தரும் குழம்பியவாறு அவர் பின்னே நடக்கலானார்.

அடுத்து, அவர்கள் சென்றது ஓர் தனிக்குடிசை. அங்கு வறுமைகுடி கொண்டிருந்தது. அங்கு வயதான பெண்மணி மட்டும் வசித்து வந்தார். ஒரு மாடு வளர்த்துப் பால் விற்று அந்த பணத்திற் தம் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தார். அம்மூதாட்டி ஸ்ரீகிருஷ்ணர் மேல் அளவு கடந்த பக்தி கொண்டவர். அந்தப் பெண்மணி வீட்டின் முன்பு நின்ற பகவான் ஸ்ரீகிருஷ்ணர் "இந்த வயதான பெண்மணி வீட்டிற் தண்ணீர் வாங்கி வா" எனப் பக்தரிடம் சொல்ல, பக்தனும் "பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உங்கள் வீட்டின் முன்பு வந்து நிற்கின்றார். தண்ணீர்த் தாகமாக உள்ளதாம், தண்ணீர் கொடுங்கள்" என்றதும்,

அந்த வயதான பெண்மணி "நான் அனுதினமும் தொழும் எம்பெருமான் ஸ்ரீகிருஷ்ணரே வந்து இருக்கிறாரா?" என மிக்க மகிழ்ச்சியுடன் ஓர் பாத்திரத்தைச் சுத்தஞ்செய்து அதிற் சுத்தமான நீர் கொண்டு சென்று ஸ்ரீகிருஷ்ணரிடம் கொடுத்து, வணங்கி, பரவசத்தோடு நின்றார். தண்ணீர் பருகியவுடன் ஸ்ரீகிருஷ்ணர் சிரித்தவாறு "போய் வருகிறேன்" எனச் சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தார். சிறிதுதூரம் நடந்து சென்றதும், அந்த வயதான பெண்மணி வைத்திருந்த மாட்டைப் பார்த்துச் ஸ்ரீகிருஷ்ணர், "இந்தப் பசுமாடு இறந்து போகட்டும்" எனச்சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தார்.

ஸ்ரீகிருஷ்ணருடன் வந்த பக்தனோ குழம்பியவாறு கிருஷ்ணரிடம் "பகவானே! முதலில் ஓர் செல்வந்தர் வீட்டிற்குச் சென்றோம். அவர் தண்ணீர் இல்லை என்றார். அவருக்கு மேலும் செல்வம் சேரட்டும் என்றீர்கள், இரண்டாவதாக ஓர் வயதான பெண்மணி தண்ணீர் தந்து தாகந்தீர்க்க உதவினார். அவருக்கு மாடு செத்துப் போகட்டும் என்கிறீர்கள்!. கஷ்டப்படுகிறவர்களுக்குச் சாபமும், செல்வச் செழிப்போடு இருப்பவனுக்கு வரமும் தந்துள்ளீர்களே? இதுதான் இறைவன் தீர்ப்பா?" எனக் கேட்கப் பகவான் ஸ்ரீகிருஷ்ணர்,

"எவன் ஒருவன் அளவுக் கதிகமாகப் பொன்னையும் பொருளையும் தேடி அலைகிறானோ அவன் நிம்மதியை இழக்கிறான். அதனாற்தான் அவனுக்கு மேலும் பொன்னும், பொருளும் சேரட்டும் எனச் சாபமிட்டேன். அதை நீ வரமென நினைத்துக்கொண்டாய். இரண்டாவதாக அநாதையாக இருந்த அந்த வயதான பெண்மணி என்னுடைய தீவிர பக்தை. அவளுக்கு இந்தப் பூலோகத்தில் இருக்கும் ஒரே பிடிப்பு இந்தப் பசு மாடுதான். அதுவும் இறந்து விட்டால். இந்த பெண்மணியும் இறந்துவிடுவாள். அவளுக்கு மேலோகத்தில் என்னை அனுதினமும் வழிபாடு செய்வதற்காவும், நல்ல உள்ளத்திற்காகவும் சொர்க்கத்தைத் தயார் செய்து வைத்திருக்கிறேன். அவளை மேலோகத்திற் சந்தோஷமாய்க் காத்துக்கொள்வேன்" என்று கூறி மறைந்து போனார்.

# இந்துவா? சைவமா?



வைதீகம் என்றும் வேத நெறி என்றும் எமது சைவத்தமிழ் திருமுறைகளிலும், சித்தாந்த சாத்திரங்களிலும் விதந்து சொல்லப்பட்டதே இன்று இந்து என்ற பெயரால் சுட்டப்படுகின்றது. இந்து என்கின்ற சொல் பிற்காலத்தில் வந்ததாக இருக்கலாம்; அன்னியர்களால் எமக்கு வழங்கப்பட்டதாய் இருக்கலாம். ஆனால் இது ஹிந்தி மொழி பேசுபவர்களுக்கு உரிய அல்லது அவர்களை சுட்டுகின்ற சொல் அல்ல. அதே போல இந்து என்றால் சைவம் என்றும் அர்த்தம் இல்லை. இந்து என்றால் வைதீகம் அல்லது வேத நெறி. எமது நால்வேதங்களை நம்புகின்ற பின்பற்றுகின்ற அனைவரும் வைதீகர்களே இந்துக்களே.

இதற்குள் சைவர்கள், சமார்த்தர்கள், வைணவர்கள் யாவரும் அடங்குவர். வேதங்களை நம்பும் அதே வேளை சிவாகமங்களை தமது சிறப்பு நூலாகக் கொண்டவர்கள் சைவர்கள். இவர்களுக்கு வேதம் பொது நூல்; ஆகமம் சிறப்பு நூல். ஆதலால் இவர்களை வைதீக சைவர் என்று அழைப்பர். இதேபோல வேதங்களை ஏற்றுக்கொண்டு வைகானசம், பாஞ்சராத்திரம் ஆகிய வைணவ ஆகமங்களை சிறப்பு நூலாகக் கொண்டவர்கள் வைணவர்கள். சாக்த ஆகமங்களைச் சிறப்பு நூலாகக் கொண்டவர்கள் சாக்தர்கள்.

உபநிடதங்கள், பகவத்கீதை, பிரம்ம சூத்திரம் ஆகிய மூன்றையும் பிரஸ்தானத் திரயம் என்று தமது மூன்று சிறப்பு நூல்களாகக் கொண்டவர்கள் சமார்த்தர்கள் என்னும் வேதாந்திகள். இவர்கள் அனைவரும் வேதங்களை நம்புகின்ற, எற்றுக்கொண்ட வைதீகர்களே இந்துக்களே. இந்து என்கிற சொல்லுக்கு சைவம் என்னும் சொல் சரியான மொழிபெயர்ப்பு அல்ல. வைதீகம் அல்லது வேத நெறி என்பதே சரியான மொழிபெயர்ப்பு.

ஆனால் இது சைவத்தை மட்டும் சுட்டாது. ஈழத்தில் இந்துக்கள் அனைவரும் சைவராக இருந்ததால் இங்கு இந்து என்பதும் சைவம் என்பதும் ஒரே கருத்தைச் சுட்டுவதாகக் கடந்த காலத்தில் அமைந்தது. இதனாலேயே எமது முன்னோர் இந்துக் கல்லூரி என்றும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை ***Hindu Board of Education*** என்றும் பெயரிட்டனர்.

**'வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க'**

என்று திருமுறைகளும்

**'வைதீக சைவம் பகரும்'**

என்று சித்தாந்த சாத்திரங்களும்

**'வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் பேதமது என்பர், பெரியோர்க்கு அபேதமே'**

எமது திருமந்திரமும் முழங்குவதை அவதானிக்க.

திருச்சிற்றம்பலம்

சைவநெறிக்கூடம்

# அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்

Der Verein SAIVANERIKOODAM
Arulganamigu Gnanalingesurar Tempel
Europaplatz.01, 3008 Bern, Switzerland
( 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96 / 031 302 09 56
www.saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam
saivanerikoodam@hotmail.ch

அனைத்து நாட்களும் காலை 09.00 மணி முதல் இரவு 20.00 மணி வரை திருக்கோவில் திறந்திருக்கும்.

மாலை 18.00 மணிமுதல் 20.00 மணிவரை பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

## 2018ம் ஆண்டு நாட்காட்டி

**17.08.2018 கொடியேற்றம்**
**25.08.2018 தேர்த்திருவிழா நடைபெறும்**

### கடகம் (ஆடி)

| | | |
|---|---|---|
| 10.07.18 | செவ்வாய் கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 12.07.18 | வியாழக் கிழமை | மறைமதி (அமாவாசை) சிறப்பு வழிபாடு மாலை 16.30 மணிமுதல். |
| 17.07.18 | செவ்வாய் கிழமை | கடகப்பிறப்பு (ஆடி), மாலை 18.30 மணிமுதல் |
| 20.07.18 | வெள்ளிக் கிழமை | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, சிறப்பு வழிபாடு 18.30 மணிமுதல் |
| 24.07.18 | செவ்வாய் கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 27.07.18 | வெள்ளிக் கிழமை | முழுமதி சிறப்பு வழிபாடு, பட்டினத்தடிகள் குருபூசை மாலை 16.30 மணிமுதல் |

### மடங்கல் (ஆவணி)

| | | |
|---|---|---|
| 08.08.18 | புதன்கிழமை | கழுவாய் (பிரதோசம்) சிறப்பு வழிபாடு மாலை 18.30 மணிமுதல். |
| 10.08.18 | வெள்ளிக்கிழமை | கடகத்திங்கள் மறைமதி நோன்பு (ஆடி அமாவாசை), காலை 10.00 மணிமுதல் |
| 13.08.18 | திங்கட்கிழமை | மடங்கற்கணை (ஆடிப்பூரம்), மாலை 16.30 மணிமுதல் |

# Radio - by - Phone

14 ஆம் ஆண்டில் கால்பதிக்கும்...

தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி



- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527

**அழையுங்கள்**
**வானொலியைக்**
**கேட்டு மகிழுங்கள்..**

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி

மேலதிக விபரங்களுக்கு...

**www.etr.fm**